## புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை
## முன்னிலை: திருமதி.கவிதா ராமு., இ.ஆ.ப.,

ந.க.அ3/11681/2021 நாள்:18.11.2022

**பொருள்:** பொதுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகு - அறந்தாங்கி வருவாய் கோட்டம் - மணமேல்குடி தாலுகா - முதுநிலை வருவாய் ஆய்வாளர் - திரு.வி.தர்மராஜன் (லேட்) என்பவர் 08.03.2019-இல் பணிக்காலத்தில் மரணம் - வாரிசுதாரர் திரு.த.பிரதீஸ்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை:**

1. அரசாணை எண். 18. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ) துறை. நாள்: 23.01.2020
2. சென்னை, கூடுதல் தலைமைச்செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதம் எண். பணி4(1)/02-44/1/2022, நாள்:05.07.2022
3. திரு.பிரதீஸ்ராஜ், த/பெ வி.தர்மராஜன் (லேட்) என்பவரின் மனு நாள்:01.02.2021.
4. அறந்தாங்கி சார் ஆட்சியரின் கடித எண். நக. அ7/1799/2021, நாள்: 10.06.2021
5. புதுக்கோட்டை, அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக உதவி இயக்குநரின் கடிதம் நக. 000004/அ4/2021, நாள்: 29.10.2021.

------

**ஆணை:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வருவாய் கோட்டம், மணமேல்குடி தாலுகா, முதுநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.வி.தர்மராஜன் என்பவர் 08.03.2019 அன்று மரணமடைந்ததால் அவரது மகனும் வாரிசுதாரருமான திரு.த.பிரதீஸ்ராஜ் என்பவர், அவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக்கோரியது தொடர்பாக அறந்தாங்கி வருவாய் கோட்ட அலுவலர் பார்வை-4 இல் காணும் கடிதத்தில் முழுமையான முன்மொழிவுகளை அனுப்பி வைத்துள்ளார். முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டது.

2. பார்வை 1- இல் காணும் அரசாணையின்படி அரசுப்பணியாளர் மரணமடைந்த மூன்று ஆண்டுகளுக்குள் கருணை அடிப்படையில் வேலை கோரி மனுச் செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இந்நேர்வில்கண்ட அரசு ஊழியர் திரு.வி.தர்மராஜன் என்பவர் 08.03.2019-இல் மரணமடைந்துள்ளார். அதன்படி மூன்றாண்டுகாலம் 07.03.2022 அன்று முடிவடைகிறது. தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 01.02.2021-இல் விண்ணப்பித்துள்ளார், மனு உரிய காலத்திற்குள் வரப்பெற்றதால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறும் திரு.த.பிரதீஸ்ராஜ் என்பவர் 23.01.2003-இல் பிறந்துள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி அவர் விண்ணப்பம் அளித்த நாளில் (01.02.2021) அவருக்கு 18 வயது முடிவடைந்துள்ளது. அதே நாளில் அவர் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று உள்ளார். எனவே கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கத் தகுதியுடையவர் ஆகிறார். இவரது பத்தாம் வகுப்பு கல்விச்சான்று மெய்த்தன்மை உடையது என சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரக இணை இயக்குநர் பார்வை-5 இல் காணும் கடிதம் மூலம் அறிக்கை அளித்துள்ளார்.

4. காலஞ்சென்ற அரசு ஊழியருக்கு பின்வரும் நபர்கள் வாரிசுதாரர்கள் என இராமநாதபுரம் வட்டாட்சியரின் வாரிசு சான்றிதழ் எண்: TN-7201904021521, நாள்:20.05.2019- இன்படி வாரிசு சான்று அளித்துள்ளார்.

| வ. எண் | வாரிசுதாரர்கள் பெயர் | உறவுமுறை | வயது | திருமணநிலை |
|---|---|---|---|---|
| 1. | செல்வராணி | மனைவி | 39 | கைம்பெண் |
| 2. | பிரதீஸ்ராஜ் | மகன் | 16 | திருமணமாகாதவர் |
| 3. | கௌரி | மகள் | 15 | திருமணமாகாதவர் |
| 4. | பேச்சிமுத்து | தாயார் | 78 | கைம்பெண் |

காலஞ்சென்ற அரசு ஊழியரின் வாரிசுதாரர்களில் அவரின் தாயார் திருமதி.பேச்சிமுத்து க/பெ.வேலு, மகள் செல்வி.கௌரி மற்றும் மனைவி திருமதி.செல்வராணி ஆகியோர் திரு.த.பிரதீஸ்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை என உறுதிமொழி ஆவணம் அளித்துள்ளனர். காலஞ்சென்ற வே.தர்மராஜன் என்பவரின் வாரிசான திரு.த.பிரதீஸ்ராஜ்என்பவர், அவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு கோரியுள்ளார்.

5. இராமநாதபுரம் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்று நி.மு.அ8/4367/2019 நாள்: 27.11.2020 -இன்படி காலம் சென்ற அரசு ஊழியரியரின் குடும்பத்தார்கள் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், சூரன்கோட்டை கிராமம், சூரன்கோட்டை காலனி கதவிலக்கம் 11/5 எனவும், இறந்த அரசு ஊழியர் திரு.வே.தர்மராஜன் மற்றும் அவரது குடும்பத்தார் பெயரில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இல்லை எனவும், இறந்த அரசு ஊழியர் திரு.வே.தர்மராஜன் குடும்பத்தில் எவரும் அரசுப்பணி மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை எனவும், திரு.வே.தர்மராஜன் இறப்பிற்குப் பின்னர் அவரது மனைவி செல்வராணி மறுமணம் செய்து கொள்ளவில்லை எனவும், இறந்த அரசு ஊழியர் திரு.வே.தர்மராஜன் குடும்பம் அவரது இறப்பிற்கு பின்னர் வறிய நிலையில் உள்ளது எனவும், அவரது குடும்பத்தில் யாரும் ஓய்வூதியம் பெறவில்லை எனவும், அவரது இறப்பிற்கு பின்னர் அவரது மனைவி செல்வராணி கூலி வேலை செய்வதன் மூலம் வருடம் ரூ.48,000/- (ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) சம்பாதித்து வருகிறார் எனவும், மேறு வருமானம் இல்லை எனவும் சான்றளிக்கப்பட்டுள்ளது.

---3

6. காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் வாரிசும் மகனுமான திரு.த.பிரதீஸ்ராஜ் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால் அவரைப் புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில், அறந்தாங்கி வருவாய் கோட்டம், மணமேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக (ஊதிய விகிதம் 19500-62000) கருணை அடிப்படையில் தற்காலிக பணிநியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

7. தனியர் பணியேற்கும்போது அவரது உடல் தகுதிச் சான்று மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அட்டை ஆகியவற்றை பணியேற்பு அறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

8. இப்பணி முற்றிலும் தற்காலிகமானது ஆகும். துறைத்தலைவர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னரே பணிவரன்முறை செய்யப்படும்.

9. எந்தவொரு தவறான தகவலின்பேரில் இப்பணி நியமனம் செய்யப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இப்பணிநியமனம் ரத்து செய்யப்டும் என அறிவிக்கப்படுகிறது. அத்தகைய நேர்வுகளில் இவர் மீது சட்டப்படியான ஒழுங்கு நடவடிக்கையுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் சம்பந்தப்பட்ட நபருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- கவிதா ராமு,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
புதுக்கோட்டை

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

18/11/2022

பெறுநர்,
திரு.த.பிரதீஸ்ராஜ்,
த/பெ.வே.தர்மராஜன் (லேட்),
11/5, சூரன்கோட்டை காலணி,
சூரன்கோட்டை கிராமம்,
இராமநாதபுரம் தாலுகா
இராமநாதபுரம் மாவட்டம். - - - - - - - - - - - பதிவஞ்சலில்

நகல்: கூடுதல் தலைமைச்செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5 -
---தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: வருவாய் கோட்டாட்சியர், அறந்தாங்கி,
நகல்: வருவாய் வட்டாட்சியர்,மணமேல்குடி.
நகல்: அ3 - இருப்புக்கோப்பு
நகல்: அ1 - பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள